முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## திறமை (திறன்கள்) கப்ஸ்ரோன் - 2017 யூலை

## (SS2) தகவல் தொழினுட்பவியல் திறன்கள்

(Information Technology skills)

2017-07-22
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 08
வினாக்கள் : 07

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(2) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும் :***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| **A** | சகல வினாக்களும் கட்டாயமானவை | 40 |
| **B** | ஆறு வினாக்களில் நான்கிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். | 60 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா 01**

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்குப் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** Office 365 என்பது மைக்ரோசொப்ற் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒரு சேவை ஆகும். இச்சேவை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானதைத் தெரிவுசெய்க:

(1) இச்சேவையானது GNU பொது மக்கள் உரிமத்தைப் (GNU General Public License) பயன்படுத்தி வழங்கப்படுகிறது..

(2) இச்சேவையைப் பெறுவதற்கு மாதாந்த அல்லது வருடாந்த உரிமக் கட்டணம் தேவையாகும்.

(3) இச்சேவையைப் பெறுவதற்கு ஒரு முறை பெற்றுக்கொள்ளப்படும் நிரந்தர உரிமம் ஒன்று தேவையாகும்.

(4) சகல windows 10 பாவனையாளர்களுக்கும் இது இலவசமாக வழங்கப்படுகிறது.

**1.2** Microsoft Dynamics என்பது கீழ்வருவனவற்றில் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருள் ஒன்றிற்கான உதாரணமாகும்?

(1) மேசை வெளியீடு (Desktop Publishing)

(2) நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning)

(3) இணைய சேவையகங்கள் (Web Servers)

(4) முன்வைப்புகள் (Presentations)

**1.3** கணினி வளங்களைப் பாதுகாப்பதற்கான தடுப்புப் பௌதிகக் கட்டுப்பாடு (preventive physical control) ஒன்றாக ***அமையாதது*** பின்வருவனவற்றுள் எது?

(1) உயிரியல் அணுகல் கட்டுப்பாடு (Biometric Access Control)

(2) காப்பு திறன் (Backup Power)

(3) கடவுச்சொல் (Passwords)

(4) பாதுகாப்புக் காவலர்கள் (Security Guards)

**1.4** உமது கணினியைப் பயன்படுத்திய உடன் பணியாற்றுபவர் ஒருவர் தமது முகநூல் (Facebook) கணக்கினைத் திறந்து பார்வையிட்டபின் அதனை log off செய்ய மறந்திருந்தமையைக் நீங்கள் கண்ணுற்றிருப்பின் இதன் பொருட்டு நீங்கள் பின்வருவனவற்றில் எந்நடவடிக்கையை எடுப்பது ஒழுக்கநெறி சார்ந்த செயற்பாடாக இருக்கும்?

(1) கணக்கினை அழித்தல் (Delete the account)

(2) அவர் இக்கணக்கினை இனிப் பயன்படுத்தப்போவதில்லை எனக் குறிப்பிட்டு கருத்தொன்றைப் பதிவிடல் (Post a comment).

(3) கணக்கினை Log-off செய்தல்

(4) அவரது பாதுகாப்பு அமைப்பினை (security settings) மாற்றுதல்

**1.5** மைக்ரோசொப்ற் அக்ஸஸ் தரவுத்தளம் ஒன்றிலிருந்து தரவுகளைப் பிரித்தெடுப்பதற்கான தேவை ஏற்படும்போது, பின்வருவனவற்றுள் எந்த அம்சம் எமக்கு நன்மையளிக்கிறது?

(1) Forms (2) Queries (3) Lookup (4) Tables.

**1.6** பின்வருவனவற்றுள் மைக்ரோசொப்ற் வேட் இலுள்ள எந்த அம்சத்தில் Heading1, Heading2, Title, Caption, Normal Subtitle போன்ற தெரிவுகளைக் காணலாம்?

(1) Styles (2) Fonts (3) Word Art (4) Smart Art

**1.7** பின்வருவனவற்றுள் மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் இலுள்ள எந்த அம்சத்தில் Morph, Fade, Wipe, Split போன்ற தெரிவுகளைக் காணலாம்?

(1) Fonts (2) Themes (3) Transitions (4) Insert Images

**1.8** பின்வருவனவற்றுள் மைக்ரோசொப்ற் ஒப்பிஸ் உடன் வழங்கப்பட்ட மின்னஞ்சல் தீர்வுகள் எவ்வாறு அறியப்படுகிறது?

(1) Outlook Express (2) Outlook (3) Hotmail (4) Gmail

**1.9** பின்வருவனவற்றுள் இணைய வங்கிச்சேவையைப் பயன்படுத்துபவர்களுக்குப் பொதுவாக **வழங்கப் படாத** அம்சம் (feature) எது?

(1) கணக்கு மீதியைச் சோதித்தல்

(2) ஏதாவது வெளிநாட்டு வங்கிக் கணக்கிற்கு பணத்தினை மாற்றுதல்

(3) கணக்கு தொடர்பான வரலாற்றை அணுகுதல்

(4) பட்டியல் கொடுப்பனவு

**1.10** மைக்ரோசொப்ற் எக்செல் இல் பயன்படுத்தப்படுகின்ற "TODAY()" என்னும் செயல்கூறினால் ஆற்றப்படும் தொழிற்பாடு பின்வருவனவற்றுள் எது?

(1) இரண்டு திகதிகளுக்கிடைப்பட்ட நாட்களின் எண்ணிக்கையினைக் காட்சிப்படுத்துவது

(2) நடப்பு ஆண்டினைக் காட்சிப்படுத்துவது

(3) நடப்பு திகதியை காட்சிப்படுத்துவது

(4) நடப்பு மாதத்தினை காட்சிப்படுத்துவது

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல்லை, வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** ஒவ்வொரு எக்செல் கோப்பினையும் ............ *(வேலைத்தாள் [Worksheet] /வேலைப்புத்தகம் [Workbook])* ஆகக் குறிப்பிட முடியும்.

**1.12** மைக்ரோசொப்ற் எக்செல் இல், நுண்ணறை ஒன்றினுள் உள்ளிடப்படும் தரவு வகையினை மட்டுப்படுத்துவதற்கு எங்களால் ............ *(தரவு வடிகட்டி [Data Filtering] / தரவுப் தகுதிபார்ப்பு [Data Validation])* இனைப் பயன்படுத்த முடியும்.

**1.13** எம்எஸ் அக்ஸஸ் (MS Access) மற்றும் ............. *(MS SQL / Oracle)* என்பன மைக்ரோசொப்ற் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பிரசித்திபெற்ற தரவுத்தள முகாமைத்துவ முறைமைகளுக்கான உதாரணங்களாகும்.

**1.14** "lk" அல்லது "com" என்றவாறு மின்னஞ்சல் ஒன்றின் இறுதிப்பகுதியில் காணப்படும் அம்சம் ............. *(களப் பெயர் [Domain Name] / உயர் மட்டக் களம் [Top Level Domain])* எனக் குறிப்பிடப்படுகிறது.

**1.15** மைக்ரோசொப்ற் அக்ஸஸ் இலுள்ள ............. *(Memo / OLE Object)* தரவு வகையானது வெவ்வேறு நிரல்களிலிருந்து (different programs) வருகின்ற இரும தரவுகளை (binary data) உட்பதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.16** நாம் எமது வதிவிடத்திற்கோ அல்லது அலுவலகத்திற்கோ நிலையான இணைய இணைப்பொன்றை பெற்றுக்கொள்வேண்டிய தேவை ஏற்படும்போது, எங்களால் ADSL இணைப்பொன்றைத் தெரிவுசெய்து கொள்ள முடியும்.

**1.17** எமக்கு அஞ்சலிடல் அட்டவணையொன்றை (mail-merge) உருவாக்கவேண்டிய தேவை ஏற்படும் போது, அதற்குரிய தரவு மூலம் (data source) எப்பொழுதும் ஒரு எக்செல் வேலைப்புத்தகத்தில் (Excel Workbook) இருத்தல் வேண்டும்.

**1.18** ஒற்றைச் சொடுக்கலைப் (single click) பயன்படுத்தி முன்வைப்பு ஒன்றை நிகழ்த்துவதற்கு PPSX (பவர் பொயின்ட் காட்சி) கோப்பினைப் பயன்படுத்த முடியும்.

**1.19** மைக்ரோசொப்ற் பவர் பொயின்ட் முன்வைப்பு (presentation) ஒன்றினை கடவுச்சொல் ஒன்றைப் பயன்படுத்தி பாதுகாக்க முடியாது.

**1.20** ஒரே மைக்ரோசொப்ற் வேட் ஆவணத்தில் பல நபர்களால் ஆற்றப்படும் உரை திருத்தல் (text Editing) இனை comments அம்சத்தைப் பயன்படுத்தி தன்னியக்கமாகக் கண்டுபிடிக்க முடியும்.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

(மொத்தம் 60 புள்ளிகள்)

### வினா 02

வர்த்தக வங்கியொன்றின் தரவுத்தளத்தில் காணப்பட்ட நிலையான வைப்பு வைத்திருப்பவர்களின் அட்டவணையிலிருந்து பெறப்பட்ட ஒரு பிரித்தெடுப்பு கீழே காட்டப்பட்டுள்ளது:

| கணக்கு இலக்கம் | குடும்பப் பெயர் | முதல் பெயர் | தே.அ.அ.இல. | ஆரம்பத் திகதி | தவணை (நாட்க ளில்) | தொகை (ரூ.) | வருடாந்த வட்டி வீதம் | முன்னுரிமை வங்கியியல் வாடிக்கையாளரா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 34-001 | சில்வா | கீதா | 805400370V | 2017-01-30 | 365 | 1,000,000.00 | 12 | ஆம் |
| 34-002 | சேனாரத்ன | ஜேம்ஸ் | 750852400V | 2017-02-23 | 90 | 200,000.00 | 9 | இல்லை |
| 34-003 | யோகராஜன் | சீதா | 887510400V | 2017-02-25 | 180 | 100,000.00 | 11 | ஆம் |
| 34-004 | ராசிக் | பஸ்லி | 921810450V | 2017-03-01 | 365 | 50,000.00 | 12 | இல்லை |
| 34-005 | ஆறுமுகம் | நெல்சன் | 702371588V | 2017-03-10 | 90 | 750,000.00 | 10 | ஆம் |
| 34-006 | பெரேரா | விஜயா | 831812566V | 2017-04-06 | 365 | 550,000.00 | 12.5 | இல்லை |
| 34-007 | ஆர்னோல்ட் | கெவின் | 833551789V | 2017-04-09 | 90 | 450,000.00 | 11 | இல்லை |
| 34-008 | அல்விஸ் | ஜகத் | 861401235V | 2017-05-01 | 180 | 150,000.00 | 11.5 | ஆம் |

<u>குறிப்புகள்</u>:

- தரவுத்தளமானது 30 / 90 / 180 / 365 நாள் தவணைகளைக் கொண்ட நிலையான வைப்புகளுக்கு மாத்திரமே ஆதரவளிக்கிறது.
- ஆகக்குறைந்த வைப்புத் தொகை ரூ. 10,000.00

மேலுள்ள தரவுகள் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளன எனக் கருதி, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக:

(a) (i) மேலுள்ள புலங்களிலிருந்து பிரதான புலமாகக் (key field) கருத்திலெடுப்பதற்கு மிகப் பொருத்தமான புலத்தைத் **தெரிவுசெய்க.** (02 புள்ளி)

(ii) மேலே (i) இல் உமது தெரிவுக்கான காரணத்தை **விபரிக்குக.** (02 புள்ளி)

(b) கீழேயுள்ள ஒவ்வொரு புலத்திற்கும் மிகப் பொருத்தமான தரவு வகையை (data type) **அடையாளம் காண்க.**

| புலத்தின் பெயர் | தரவு வகை |
|---|---|
| கணக்கின் இலக்கம் | |
| குடும்பப் பெயர் | |
| தே.அ.அ. இலக்கம் | |
| ஆரம்பத் திகதி | |
| தவணை | |
| தொகை | |
| வட்டி வீதம் | |
| முன்னுரிமை வங்கியியல் வாடிக்கையாளர் | |

(08 புள்ளிகள்)

(c) மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (MS Access) போன்ற தரவுத்தள முகாமைத்துவ முறைமைகளுடன், வலிமையாக இடைவினையுறுகின்ற (might interact) பயனர்களின் வெவ்வேறுபட்ட வகைகள் (different types of users) மூன்றினை (03) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 03

(a) மைக்ரோசொப்ற் பவர் பொயின்ட் இன் பின்வரும் பணிக்கூறுகளால் ஆற்றப்படும் பணிகளை **விபரிக்குக:**

(i) Sections

(ii) Themes

(iii) Transitions

(iv) Animations

(v) Macros

(vi) Slide Master (12 புள்ளிகள்)

(b) 25 பார்வையாளர்களைக் கொண்ட குழு ஒன்றுக்கு உங்களது கம்பனி பற்றிய அறிமுகத்தை வழங்கும் பொருட்டு, நீங்கள் முன்வைப்பு (presentation) ஒன்றினைச் செய்யவேண்டியுள்ளதாகக் கருதிக்கொள்க. உங்களிடம் உங்கள் சொந்த மடிக்கணினியைத் (Laptop) தவிர வேறு எந்த பல்லூடக எறியமோ (multimedia projector) அல்லது சாதனமோ (device) இல்லை எனக் கருதி, மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் ஐப் பயன்படுத்தி இப்பணியினை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்பதை **விபரிக்குக.** இங்குள்ள பார்வையாளர்கள் ஒவ்வொருவரும் மடிக்கணினியைக் கொண்டிருப்பதுடன் முன்வைப்புக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அறையிலுள்ள சகல கணினிகளும் உயர் இணைய வேகத்தையும் கொண்டிருப்பதாக நீங்கள் கருதிக்கொள்ளாம். (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனமொன்று விண்ணப்பதாரிகளின் தகவல் தொழினுட்பத் திறன்களை (IT Skills) மதிப்பிடுவதற்காக தெரிவுப் பரீட்சை ஒன்றை முன்னெடுத்திருக்கிறது. இந்நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் புள்ளிகளைக் கொண்ட வேலைத்தாளின் பிரித்தெடுப்பு கீழே காட்டப்பட்டுள்ளது:

| | A | B | C | D | |
|---|---|---|---|---|---|
| 1 | **Examination Number** | **IT Skills Paper Marks** | **IT Skills Practical Paper** | **Applicant's Name** | |
| 2 | E1255 | 85 | Passed | M.R. Munasinghe | |
| 3 | E1258 | 90 | Failed | Kamali Perera | |
| 4 | E1251 | 77 | Passed | S. Sangeetha | |
| 5 | E1267 | 55 | Passed | H. Hussain | |
| 6 | E1275 | 80 | Passed | P. Jayabalan | |
| 7 | E1280 | 79 | Failed | N.S. Janz | |
| 8 | E1293 | 55 | Failed | D.C. Cassim | |
| 9 | | | | | |
| 10 | Highest Mark | | | | |
| 11 | Lowest Mark | | | | |
| 12 | Average Mark | | | | |
| 13 | Highest Mark Obtained by | | | | |
| 14 | No. of Applicants who Passed | | | | |
| 15 | No. of Applicants who sat for the exam | | | | |
| 16 | | | | | |

பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதற்காக, விரிதாள் (spreadsheet) ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற பணிக்கூறுகள் (functions) மற்றும் சூத்திரங்கள் (formulae) தொடர்பான தங்களது அறிவைப் பிரயோகிக்குக.

(a) நுண்ணறை B10 இல், தகவல் தொழினுட்ப திறன்கள் வினாப்பத்திரத்திற்காகப் (IT Skills Paper) பெறப்பட்ட ஆகக்கூடிய புள்ளியைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான பணிக்கூறை (function) அடையாளங்கண்டு அதற்குரிய சூத்திரத்தினை (formulae) எழுதுக. *(குறிப்பு: நீங்கள் ஒரு ஒற்றைப் பணிக்கூறைப் (single function) பயன்படுத்த வேண்டும்)* (02 புள்ளிகள்)

(b) நுண்ணறை B11 இல், தகவல் தொழினுட்ப திறன்கள் வினாப்பத்திரத்திற்காகப் பெறப்பட்ட ஆகக் குறைந்த புள்ளியைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான பணிக்கூறை அடையாளங்கண்டு அதற்குரிய சூத்திரத்தினை எழுதுக. *(குறிப்பு: நீங்கள் ஒரு ஒற்றைப் பணிக்கூறைப் பயன்படுத்த வேண்டும்)* (02 புள்ளிகள்)

(c) நுண்ணறை B12 இல், தகவல் தொழினுட்ப திறன்கள் வினாப்பத்திரத்திற்காகப் பெறப்பட்ட சராசரிப் புள்ளியைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான பணிக்கூறை அடையாளங்கண்டு அதற்குரிய சூத்திரத்தினை எழுதுக. *(குறிப்பு: நீங்கள் ஒரு ஒற்றைப் பணிக்கூறைப் பயன்படுத்த வேண்டும்)* (02 புள்ளிகள்)

(d) நுண்ணறை B13 இல், தகவல் தொழினுட்ப திறன்கள் வினாப்பத்திரத்திற்காக ஆகக்கூடிய புள்ளியைப் பெற்ற விண்ணப்பதாரியின் பெயரை இனங்காண்பதற்குப் பொருத்தமான பணிக்கூறை அடையாளங்கண்டு அதற்குரிய சூத்திரத்தினை எழுதுக. *(குறிப்பு: நீங்கள் ஒரு ஒற்றைப் பணிக்கூறைப் பயன்படுத்த வேண்டும்)* (04 புள்ளிகள்)

(e) நுண்ணறை C14 இல், செய்முறைப் பரீட்சைக்காக (practical paper) "சித்தி" தரத்தினை ("Passed" Grade) பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைக் கணிப்பதற்குப் பொருத்தமான பணிக்கூறை அடையாளங்கண்டு அதற்குரிய சூத்திரத்தினை எழுதுக. *(குறிப்பு: நீங்கள் ஒரு ஒற்றைப் பணிக்கூறைப் பயன்படுத்த வேண்டும்)* (03 புள்ளிகள்)

(f) நுண்ணறை C15 இல், இப்பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைக் கணிப்பதற்குப் பொருத்தமான பணிக்கூறை அடையாளங்கண்டு அதற்குரிய சூத்திரத்தினை எழுதுக. *(குறிப்பு: நீங்கள் ஒரு ஒற்றைப் பணிக்கூறைப் பயன்படுத்த வேண்டும்)* (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 05

(a) உலகளாவிய வலையமைப்பை (WWW) வழிச்செலுத்துவதற்கு (to navigate) வலை உலாவி மென்பொருள் (web browser software) அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

விண்டோஸ் இயங்குதள முறைமைகளைப் (Windows Operating Systems) பயன்படுத்தி தனிப்பட்ட கணினிகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வலை உலாவி (web browser) மென்பொருட்கள் மூன்றினைப் (03) **பட்டியலிடுக..** (03 புள்ளிகள்)

(b) வலை உலாவியில் காணப்படும் பின்வரும் பொத்தான்கள் / அம்சங்களால் ஆற்றப்படும் பணியினை **விபரிக்குக.**

(i) Home

(ii) Back

(iii) Reload

(iv) Bookmarks

(v) Private Window / Incognito Window

(vi) Addons / Extensions (12 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 06

***திருமதி. சஷினி எக்கொடகே*** (sashini@iplastics.lk) என்பவர் **வரையறுக்கப்பட்ட இம்பீரியல் பிளாஸ்டிக் கம்பனியின்** கணக்காளராவார். இவர், யப்பானிலுள்ள **ஹிடாச்சி இன்டஸ்ரியல் கம்பனி** இன் வெளிநாட்டுச் சந்தைப்படுத்தல் முகாமையாளரான ***திரு. ஹிடாக்கி ஹிரஹாவா***வுக்கு (hhirakawa@hitachi.co.jp) மின்னஞ்சல் (கீழுள்ள செய்தியைப் பார்க்க) ஒன்றை அனுப்பவேண்டியிருந்தது. மின்னஞ்சலானது **இம்பீரியல் பிளாஸ்டிக் கம்பனி** விருப்பம் கொண்டுள்ள ஒரு புதிய பிளாஸ்டிக் அச்சுவார்ப்பு எந்திரம் பற்றிய விடயம் சம்பந்தமானதாகும். **இம்பீரியல் பிளாஸ்டிக் கம்பனியின்** CEO ஆன **திரு. எம். இம்தியாஸ்** (ceo@iplastics.lk) அவர்கள், இம்மின்னஞ்சலின் பிரதி ஒன்றினை இலங்கையிலுள்ள **ஹிடாச்சி இன்டஸ்ரியல் கம்பனியின்** உள்ளூர் பிரதிநிதியான **திரு. வில்சன் ஜயலத்**திற்கு (jayalath@gmail.com) அனுப்புமாறு ***திருமதி. சஷினி எக்கொடகே*** இற்கு அறிவித்திருந்தார்.

மேலும், இம்மின்னஞ்சலுடன் வடிவமைப்புக் கோப்பின் (இது ***திருமதி. சஷினி எக்கொடகே***யின் கணினியில் C:\Images\Design2017.jpg இல் சேமிக்கப்பட்டிருக்கிறது) பிரதியொன்றை அனுப்புமாறும் CEO அறிவுறுத்தி யிருந்தார். அத்துடன் இம்மின்னஞ்சலின் ஒரு பிரதியை தாம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் (தனக்கு அனுப்புமாறும்) ஆயினும் தனது மின்னஞ்சல் முகவரியான (ceo@iplastics.lk) என்பது அனுப்புநரைத் (sender) தவிர மற்றைய எவருக்கும் கட்புலனாகக்கூடாது (not visible) எனவும் அறிவுறுத்தியிருந்தார்.

***திருமதி. சஷினி எக்கொடகே*** இன் வகிபாகத்தைத் தாங்கள் வகிப்பதாகவும், புதிய மின்னஞ்சல் மென்பொருளைப் பயன்படுத்துவதாகவும் கருதிக்கொள்க. உங்களுக்கு பின்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

- ***வரையறுக்கப்பட்ட இம்பீரியல் பிளாஸ்டிக் கம்பனியின்*** முகவரி : இல. 220, திம்பிரிகஸ்யாய வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05, இலங்கை. தொலைபேசி / தொலைநகல்: +94-11-2559600

- ***ஹிடாச்சி இன்டஸ்ரியல் கம்பனியின்*** முகவரி : 9-932, சவுகோகுடாய் 34, ஹட்சுகயிச்சி சி, ஹிரோசிமா பிறீபெக்சுவ, யப்பான். தொலைபேசி / தொலைநகல்: +81-1029 2993 23

கீழே 1 – 8 வரை குறிக்கப்பட்டுள்ள பெட்டிகளில் வரவேண்டிய பொருத்தமான உரைகளை (text) அடையாளம் காண்பதன் மூலம் மேலுள்ள தகவலை தொடர்பாடல் செய்வதற்கு, மின்னஞ்சல்கள் அனுப்புதல் தொடர்பான உங்களது அறிவினைப் பிரயோகிக்க. உமது விடைத்தாளில், 1 – 8 வரையான அவ்விலக்கங்களை எழுதி அவ்விலக்கங்கள் குறிக்கும் பெட்டிக்குரிய உரையினை (text) எழுதுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| To: | -----------------------(1)--------------------------- | (01 புள்ளி) |
| CC: | ------------------------(2)--------------------------- | (02 புள்ளிகள்) |
| BCC: | ------------------------(3)--------------------------- | (02 புள்ளிகள்) |
| Subject: | ------------------------(4)--------------------------- | (02 புள்ளிகள்) |
| அன்பின் திரு. -------------------------(5)------------------------- | | (02 புள்ளிகள்) |
| 2017.06.01 ந் திகதிய எனது முன்னைய மின்னஞ்சல் தொடர்பானது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்புக்கான மதிப்பீடு ஒன்றினைத் தயவு செய்து எங்களுக்கு வழங்கவும். இவ்வடிவமைப்புக்கான தொழினுட்ப விவரணங்களும் அதே வரிப்படத்தில் இணைக்கப்பட்டுள்ளன. உங்களது விலைமனுவில் சாதனத்திற்கான நிதித் தவணைகள், உத்தரவாதம் மற்றும் பராமரிப்பு அட்டவணைகள் போன்றவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். நன்றி, உண்மையுள்ள, | | |
| ---------------(6)--------------- | | (02 புள்ளிகள்) |
| கையொப்பம் | -----------------------(7)--------------------------- | (02 புள்ளிகள்) |
| இணைப்பு | -------------------------(8)------------------------- | (02 புள்ளிகள்) |

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 07

(a) மைக்ரோசொப்ற் வேட் இலுள்ள பின்வரும் அம்சங்களால் ஆற்றப்படும் பணிகளை **விபரிக்குக**:

(i) Thesaurus

(ii) Track Changes

(iii) Table of Contents

(iv) Page Break

(v) Watermark

(vi) Themes (ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 12 புள்ளிகள்)

(b) மைக்ரோசொப்ற் வேட் இல் காணப்படுகின்ற "Smart Art" மற்றும் "Word Art" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*